**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : SC.No.316/2022**

**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பொன்னையா | தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | அழகியமண்டபம் | வயது | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 09th, 2025.

(**2**ம் எதிரி ஆஜர் இல்லை மனு அனுமதிக்கப்பட்டுள்ளது**.** இதர **எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் வெள்ளிச்சந்தை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு அச்சன்புதூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 4.8.2015ம் தேதி காலை 6.00 மணிக்கு அச்சன்புதூர் வட்ட காவல் ஆய்வாளருடன் நானும் காவலர் சேக் பாசல் உசேன், பெருமாள் ஆகியோர்கள் காசிதர்மம் செல்லும் ரோட்டில் மசின்ன காட்டு விலக்கில் ரோந்து செய்து வரும் போது அதே ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காக வந்த டிஎன் 76 எம் 1473 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் பஜாஜ் டிஸ்கவர் மோட்டார் சைக்கிளை பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த பிச்சைக்கனி என்பவர் ஓட்டி வரஅவரது பின்னால் மதிசெல்வம் என்பவர் கையில் ஒரு சாக்குப் பையுடன் அமர்ந்திருக்க அவருக்கு பின்னால் பால்பாண்டியன் என்பவரும் மற்றொரு இருசக்கரவாகனமான டிஎன் 76 க்யு 7106 என்ற இரு சக்கர வாகனத்தை சந்தனபாண்டியன் என்பவர் ஓட்ட அவருக்கு பின்னால் சங்கர் மற்றும் இசக்கித்துரை அமர்ந்து கொண்டு வந்தவர்கள்

போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டவுடன் இரு சக்கர வாகனத்தை திருப்பி தப்பி செல்ல முயன்றவர்களை பிச்சைக்கனி ஓட்டி வந்த இரு சக்கரவாகனத்தையும், பிச்சைக்கனி மற்றும் மதிசெல்வம் , மற்றும் சந்தனபாண்டியன் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தில் இருந்த இசக்சித்துரையை மட்டும் பிடித்துக் கொண்டு மற்ற இருவரான சந்தனபாண்டியன், சங்கர் ஆகியோர்கள் இரு சக்கர வாகனத்துடன் சென்று விட்டார்கள். நாங்கள் பிடித்த நான்கு நபர்களில் மதிசெல்வம் கையில் வைத்திருந்த சாக்கு பையைசோதனை செய்த போது சாக்கு பையில் ஒரு எஸ்பிபிஎல் துப்பாக்கி இருந்தது. மேற்படி எதிரிகளை பிடித்து விசாரிக்க மதிசெல்வம் என்பவர் அந்த வழியாக வந்த சாட்சிகள் மீராக்கனி ஆகியோர்கள் முன்னிலையில் தானாக முன் வந்து ஒரு ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மதிசெல்வம் என்பவர் எடுத்து ஆஜர் செய்த எஸ்பிபிஎல் துப்பாக்கி ஒன்றையும் வெள்ளை கலர் சாக்கு பை ஒன்றையும் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினோம். பால்பாண்டி எடுத்து ஆஜர் செய்த எஸ்பிபிஎல் துப்பாக்கியின் தோட்டா ஒன்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினோம். இசக்கித்துரை எடுத்து ஆஜர் செய்த எஸ்பிபிஎல் துப்பாக்கி தோட்டா ஒன்றை அத்தாட்சி ஒன்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினோம். பிச்சைக்கனி எடுத்து ஆஜர் செய்த அவரது இரு சக்கரவாகனமான டிஎன் 76 எம் 1473 மற்றும் எஸ்பிபிஎல் துப்பாக்கி தோட்டா ஒன்றையும் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினோம்.மேற்படி அத்தாட்சிகள் அ.சா.ஆ 4. அசா.1 முதல் 4 ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5. ஒப்புதல் வாக்குமூலத்தில் காட்டப்படும் இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.6 ஆகும். பின்பு சொத்துக்கள் மற்றும் எதிரிகளை நிலையம் கொண்டு வர ஆய்வாளருக்கு

உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை.**

எத்தனை மணிக்கு அச்சன்புதூர் காவல் நிலையத்தில் கிளம்பினோம் என்றால் காலை 5.45 மணிக்கு கிளம்பினோம். ஜீப்பில் ரோந்துக்கு சென்றோம். ஆய்வாளர் விசாரணையில் எதிரி மதிசெல்வம் வைத்திருநத சாக்குப் பையை சோதனை செய்தபோது எஸ்பிபிஎல் துப்பாக்கி வைத்திருந்ததை பார்த்ததாக சொல்லியுள்ளேன். அதை ஆய்வாளர் பார்த்தார். மதிசெல்வத்திடம் இருந்து ஆய்வாளர்அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். அதன் பிறகு எதிரி மதிசெல்வம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி மதிசெல்வம் சொல்ல சொல்ல ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தினை யார் கைப்பட எழுதினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. மதிசெல்வத்தை எத்தனை மணிக்கு விசாரித்தோம் என்று ஞாபகம் இல்லை. அத்தாட்சிகளில் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்று ஞாபகம் இல்லை. எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்று ஞாபகம் இல்லை. அத்தாட்சியில் மதிசெல்வத்திடம் இருந்து துப்பாக்கியை 4.8.2015ம் தேதியன்று 7.30 மணிக்கு கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.அத்தாட்சியில் மதிசெல்வத்திடம் இருந்து பஜாஜ் பைக் 4.8.2015ம் தேதியன்று 8.15 மணிக்கு கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எல்லா அத்தாட்சிகளிலும் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு நாங்கள் திரும்ப 8.00 மணியிலிருந்து 8.30 மணிக்கு வந்தோம். பாக்கெட் டைரியில் குறிப்பு இருக்கும் என்றால் சரிதான். பாக்கெட் டைரியை ஆய்வாளர் விசாரிக்கும்போது ஆஜர்படுத்தவில்லை.

இந்த சம்பவம் சம்பந்தமாகஆய்வாளரிடம் நான் தனி அறிக்கை கொடுக்கவில்லை. மதிசெல்வத்தை கைது செய்யும்போது ஆய்வாளர் மற்றும் எஸ்.எஸ்.ஐ துப்பாக்கி வைத்துள்ளார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. மதிசெல்வம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போது ஆய்வாளர் நான் பெருமாள்ராஜ், சிறப்பு உதவி ஆய்வாளர் ஆகியோர்கள் சுற்றி நின்றோம் என்றால் சரியல்ல. அத்தாட்சி தயார் செய்யும்போது ஊர் பெரியோர்களை அழைக்கவில்லைஎன்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்து எழுதினார். தோட்டாவை கைப்பற்றப்பட்டு எஸ்எச்ஓ சீல் வைக்கப்பட்டதா என்று ஞாபகம் இல்லை. துப்பாக்கியுடன் தோட்டாக்களை பொருத்திப் பார்த்தார்களா என்றால் இல்லை. நான் சொன்னநாள் சொன்ன நேரத்தில் ்ஆய்வாளர் மற்றும் பார்ட்டி சகிதம் ரோந்து செல்லவில்லைஎன்றால் சரியல்ல. எதிரிகள் மதிசெல்வம், பிச்சைக்கனி, பால்பாண்டி, ஆகியோர்களை 4.8.2015 அன்று கைது செய்யவில்லை என்றாலும் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள், இருசக்கர வாகனம் கைப்பற்றவில்லைஎன்றாலும் சரியல்ல. இதர எதிரிகள் சம்பவஇடத்தில் வரவில்லை என்றால் சரியல்ல. வீட்டில் இருந்த எதிரிகளைகாவல் நிலையம் அழைத்து வந்து ஆவணங்கள் தயார் செய்து பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.10 17:25:07 +0530